கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (யூன் 2018)

# HCS 4123 Hinduism in South India

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. பண்டைத் தமிழரின் சமய வாழ்வில் போரில் வீழ்ந்த வீரரைக் கல்லில் அமைத்து வழிபடும் வழக்கம் இருந்தது. இக்கூற்று தொடர்பாக மேல்வரும் தலைப்புகளை விளக்குக.

    (i) நடுகற்களும் அவற்றின் வகைகளும் (10 புள்ளிகள்)

    (ii) நடுகல் வழிபாட்டின் நியமங்கள் (15 புள்ளிகள்)

02. தமிழ்ப் பக்தி இலக்கிய மரபிற்கு முன்னோடியானவை காரைக்கால் அம்மையாரது பக்திப்பனுவல்களாகும். இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் தலைப்புகளை பரிசீலனை செய்க.

    (i) அந்தாதி, பதிக வடிவங்கள் (10 புள்ளிகள்)

    (ii) காபாலிக சைவ மரபு (15 புள்ளிகள்)

03. ஆந்திராவின் இந்துப் பண்பாட்டு மரபில் மேல்வரும் விடயங்கள் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

    (i) ஆந்திர மக்களின் சமயம், வழிபாடுகள் (13 புள்ளிகள்)

    (ii) திருப்பதி வேங்கடாசல பதி கோயில் (12 புள்ளிகள்)

04. "விஜய நகர நாயக்கர் கால இந்துப் பண்பாட்டு அம்சங்களை அறிந்துகொள்வதற்கான மூலாதாரங்களில் நாணயங்கள் முதன்மையான இடத்தினை வகிக்கின்றன." இக்கால நாணயங்கள் தொடர்பாக மேல்வரும் தலைப்புகளை மதிப்பிடுக.

    (i) நாணயப் பொறிப்பும் உலோகப் பயன்பாடும் (10 புள்ளிகள்)

    (ii) நாணயங்கள் பிரதிபலித்துக் காட்டும் சமய நெறிகள் (15 புள்ளிகள்)

## பகுதி – II

05. நவீன கால சீர்திருத்த இயக்கங்களுக்கு முன்னோடியாக பல்லவர்காலப் பக்தியியக்கம் செயற்பட்ட விதத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க. (25 புள்ளிகள்)

06. கேரள நாட்டின் இந்துப் பண்பாட்டு அம்சங்கள் பற்றி கட்டுரை எழுதுக. (25 புள்ளிகள்)

*****